Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 20 இதழ் - 2 பிப்ரவரி - 2007


## EKKLESIA BIBLE COLLEGE
## SIXTH BATCH GRADUATES
10.2.2007



(10.2.2007 அன்று காங்கயம் **எக்லீசியா வேதாகமக் கல்லூரியில்** பட்டம் பெற்ற மாணவர்கள்)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி? ........ 7
3. பெண்கள் பகுதி ........ 11
4. சிறுவர் பகுதி ........ 15
5. தேவனுக்கு பிரியமான ஆராதனை ........ 17
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 20
7. இரட்சிப்பு என்று ஒன்று உண்டா? ........ 24
8. தேவை மிகவும் அவசரமாய் தேவை ........ 27
9. இரத்தசாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 FEBRUARY - 2007 Issue - 2


முன்னாள் ஆசிரியர் உரை

## நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிற தகுதி எனக்கோ இந்த உலகில் வேறு எவருக்குமோ அல்லது குழுவினருக்கோ இல்லை என்பதை எல்லா மனத் தாழ்மையுடனும் ஒப்புக் கொள்ளுகிறேன். கிறிஸ்து ஒருவருக்கே அத்தகுதி உண்டு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வோம். ஏனெனில் அவரே நியாயாதிபதி (அப். 17:31).

இருப்பினும், எனது நண்பர்களும், உறவினர்களும் பல்வேறு சபைகளில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களில் பலர் மிகுந்த பக்தி வைராக்கியமும், ஆர்வமும் உள்ளவர்கள். கர்த்தருடைய காரியங்களுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறவர்கள். ஆனாலும் பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் "தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியெனில், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவனுக்குக் கீழ்ப்படியா திருக்கிறார்கள்". (ரோமர். 10:2,3) என்று வருத்தத்தோடே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது, நான் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறேன் என்று தயவு செய்து என்மீது ஆத்திரப்படாதீர்கள். "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும்" (யோவான் 12:48) என்பதை நான் மறந்து விடவில்லை. ஆயினும் நாம் நேசிக்கிற

உறவினர்களோ, நண்பர்களோ தேவனுடைய சித்தத்தை அறியாமலும், அல்லது தேவனுடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறினாலும், கவலையீனமாக இருந்தாலும், அவர்கள் பேரில் உள்ள கரிசனையால் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைத்து தேவனுடைய சித்தத்தைப் புரிய வைத்து, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தூண்டுவதும் நம்முடைய கடமையன்றோ!.

அப்போஸ்தலனாகிய பவுல், தன் இனத்தாரின் தவறான வைராக்கியத்தைக் குறித்து "எனக்கு மிகுந்த துக்கமும், மனவேதனையும் உண்டாயிருக்கிறது" (ரோமர் 9:1) என்கிறாரே, அது போன்ற ஒரு பந்த பாசத்தால் இதைப் பற்றி எழுதத் துணிந்தேன்.

முதலாவதாக, "எல்லா சபைகள்" என்பதே வேத வாக்கியத்துக்கு முரணானது. சபை ஒன்று தான் (எபே. 4:4) அதில் ஒரே சரீரம் என்று தானே இருக்கிறது என்பீர்கள். அவசரப்படாமல் அதே நிருபம் 1-ம் அதிகாரம் 23-ம் வசனத்தையும் வாசியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் என் சபையைக் கட்டுவேன் என்று ஒருமையில் தான் சொல்லியிருக்கிறார். (மத். 16:18) அது இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே பண்டிகை யன்று வேத வசனத்தின்படி எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. (அப். 2:41-47) அந்தச் சபையை வேதம் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கிறது. (ரோமர் 16:16).

உண்மை இவ்வாறு இருக்க இன்று மனிதன் பல நிறுவனங்களை அமைத்துக் கொண்டு அவைகளுக்குச் சபை என்ற பெயரைச் சூட்டி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுய ரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த தேவனுடைய சபையைக் கொச்சைப்படுத்தி மகிழ்கிறான். (அப். 20:28). இன்றைக்கு மனிதனால் நிறுவப்பட்ட சற்றேறக்குறைய நானூறு நிறுவனங்கள் சபைகள் என்று கூறிக் கொண்டு மக்களைக் குழப்புவதால் கிறிஸ்து கட்டிய உண்மையான சபை எது? என்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இது இரட்சிப்புக்குத் தூணும் ஆதாரமாக இருக்கிற கிறிஸ்துவின் சபையை நோக்கி மக்கள் வராதபடி மக்களை வஞ்சிக்க சத்துருவாகிய சாத்தான் செய்யும் சதித் திட்டமேயன்றி வேறல்ல.

இந்தச் சமயத்தில் பழைய ஏற்பாட்டில் கடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. புகழ் பெற்ற சாலமோன் அரசனுக்குப் பிறகு அவன் குமாரன் ரெகோபெயாம் அரசுக் கட்டில் ஏறுகிறான். அவனுடைய மதியீனமான போக்கினால் இஸ்ரவேல் சாம்ராஜ்ஜியம் இரண்டாக உடைந்து, வடபகுதிக்கு யெரோபெயாம் அதிபதியானான். ஆனாலும், அவனுக்கு ஒரு பயம். மக்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்துக்குப் போக்கு வரவாக இருந்தால் அரச பரம்பரையை சேர்ந்த ரெகோபெயாம் மீது அன்பும், மதிப்பும் ஏற்பட்டு, நாளடைவில் மக்கள் அவன் பக்கம் சாய்ந்து விட்டால்

ஆபத்து என்று நினைத்தான். ஆகவே, அவன் மக்களை எருசலேம் தேவாலயத்துக்குப் போய்த் தொழவேண்டிய அவசியம் உண்டாகாதபடி, தடுத்து நிறுத்த ஒரு தந்திரம் செய்தான். அவனுடைய எல்லைக்குள் அதாவது தாணிலும், பெத்தேலிலும், விக்கிரக கோவில்களைக் கட்டி எகிப்தின் தெய்வங்கள் என்று நம்பப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, ஒரிஜினல் நாடாகிய யூதாவில் ஆதரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியில் பண்டிகை கொண்டாடி, மேடையிலே பலியிட்டான். மக்களைப் பார்த்து, நீங்கள் எருசலேமுக்குப் போகும் சிரமம் வேண்டாம். இங்கேயே தொழுங்கள் என்று திசை திருப்பினான். அதே நாளில் பண்டிகை, ஆர்ப்பாட்டம், அலறல், வேடிக்கை! மக்களுக்கு இது போதுமே. தேவன் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்ளுகிறாரா, இல்லையா? அதைப் பற்றி யாருக்குக் கவலை? (1ராஜா 12:26-33).

இன்றைக்கும் அதுவே நிலை பிழைக்கத் தெரிந்த சில சுயநலவாதிகள், மக்களுடைய மடமையையும், மெத்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தேவனுடைய ஸ்தானத்திற்கு தங்களை உயர்த்திக் கொண்டு மக்களுடைய மனநிலைக்கேற்ப தேவனுடைய நீதிச் சட்டங்களின் வீரியத்தைக் குறைத்து திருத்தம் செய்து மக்கள் கூட்டத்தைச் திரளாய்ச் சேர்த்துக் கொள்கிறார்கள். இவர்களின் தந்திரங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் பலரும், புரிந்து கொண்ட சிலர் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாய் கசிந்து வருவதை ருசித்துக் கொண்டும், இரசித்துக் கொண்டும் இப்படிப்பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித்துக் கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு போலி திருப்தியோடு உலா வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பிக்கப்படுகிற உபதேசங்களில் அநேகம் வேத வசனத்துக்குப் புறம்பானவைகள், மிக முக்கியமானவைகள் என்று வேதம் குறிப்பிடுகிற சில உபதேசங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதேயில்லை என்பது மிகவும் வேதனையாயிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு அதைச் சுட்டிக் காட்டி அவர்களைச் சரியான பாதையில் போகும்படி ஆலோசனை கூறுவது நியாயம்தீர்ப்பது அல்ல; நல்லெண்ண மன்றாட்டே (யாக் 5:20).

சான்றோர்களே! அரசு அங்கீகாரம் இல்லாத ஒரு பள்ளியில் உங்கள் பிள்ளைகளைச்சேர்ப்பீர்களா? அல்லது இரண்டும் இரண்டும் ஐந்து என்றோ, தமிழ்நாடு ஐரோப்பா கண்டத்தில் இருக்கிறது என்றோ ராஜீவ்காந்தி, மகாத்மா காந்தியின் பேரன் என்றோ போதிக்கப்படுகிற பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து அனுப்புவீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். ஆனால் சபையா? அதைப்பற்றி என்ன ஐயா, எல்லாம் இயேசு சாமியைத் தானே கும்பிடுகிறான். மாதாவையும் கும்பிடுகிறானோ, அது அவன் சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே, வேண்டாம் சகோதரனே, சகோதரியே!

ஆன்மீகக் காரியங்களை அப்படி அசட்டை செய்ய வேண்டாம். தயவு செய்து லாசரு ஐசுவரியவான் உவமையை ஊன்றி வாசியுங்கள் லூக். 16:27-31 வரை உள்ளதைச் சிந்தியுங்கள்.

முதலாவதாக, சிறு குழந்தையாக இருக்கும்போது ஞானஸ்நானம் என்ற பெயரால் தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் இருக்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறான எண்ணம். மாற்கு சுவிசேஷம் 16:16, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று தெளிவாகப் போதிக்கிறது. இதில் இரண்டு விதமான போதனைகள் சம்பந்தப்பட்டிருக் கின்றன. ஒன்று ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டவனுடைய வயதும் புரிந்து கொள்ளும் தன்மையும், (2) திருமுழுக்கு என்று அர்த்தம் கொள்ளும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட முறை.

"விசுவாசமுள்ளவனாகி" என்றால், சொல்லப்படுகிற சத்தியத்தைப் புரிந்த கொண்டு நம்பிக்கை தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடு என்று பொருளாகும். ஒரு சிறு குழந்தை சொன்னதைக் கேட்டு விசுவாசிக்குமா? புரிந்து கொள்ளுமா? அதற்குத் தான் பெற்றோர்கள் பொறுப்பு எடுக்கிறோமே! என்பீர்கள். அதற்கு எங்கே ஐயா, ஆதாரம்? இயேசு கிறிஸ்துவே முப்பது வயதில் தானே திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார். (லூக். 3:23) வேதத்தின் காரியங்களை வேதத்தின்படி செய்வது தானே நியாயம். நம் இஷ்டம் போல செய்து கொள்வதற்கு அதிகாரம் எங்கே? எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறாரே இயேசு (மத். 28:19) ஆகவே, குழந்தை ஞானஸ்நானத்தை இனிமேலாவது கைவிடுங்கள்.

இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கும் முறை. திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் என்ற சொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Baptizo (பாப்டிஸோ) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அமுக்குதல் அல்லது மூழ்கடித்தல் என்று பொருள். சிறு குழந்தையில் தலைமேல் இரண்டு சொட்டு தண்ணீர் தெளித்து திருமுழுக்குக் கொடுத்தாயிற்று என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கும் மனப்பக்குவம் இல்லாத பச்சிளங் குழந்தையின் தலை மீது இரண்டு சொட்டுத் தண்ணீரைத் தெளித்து இது தான் ஞானஸ்நானம் என்று நானும் நீங்களும் ஒத்துக் கொண்டாலும் வேத வசனம் ஏற்றுக் கொண்டு இரட்சிப்புத் தருமா? "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிடில் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்கிறார் இயேசு (யோவான் 3:5).

ஒருவனுடைய பிரவேசமே தவறு என்று ஆகும்போது அவன் இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி? "ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூடப்படான்

(1தீமோ 2:5) என்று பவுல் தீமோத்தேயு என்ற இளம்பிரசங்கிக்கு எழுதுகிறார். பந்தயத்தில் முறைப்படி உன்னைப் பதிவு செய்து கொள்ளாமலும் பந்தயம் நடத்தியவரின் நிபந்தனைக்குக் கட்டுப்படாமலும் ஓடினால் பரிசு எப்படிக் கிடைக்கும்? இன்று அநேக கிறிஸ்தவர்கள் முறைப்படி பதிவு செய்து கொள்ளாத ஓட்டக்காரனைப் போல் கர்த்தருடைய உபதேசச் சட்டத்தின்படி செய்யாமல் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பரிசு பெறுவது முடியாத காரியம். ஒருவேளை பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும் நீங்கள் வாசித்து தியானிப்பதால் உங்கள் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பாக இருக்கலாம். அதற்கு நீங்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தான் படிக்க வேண்டும் என்பதில்லை. அழகிய தமிழில் உள்ள திருக்குறள், முஸ்லிம்களின் வேத புத்தகமாகிய குரான், ஹிந்து மதத்தினரின் பகவத் கீதை போன்ற நூல்களே கூடப் போதும். இந்த உலகத்தில் மகிழ்ச்சியாக, உல்லாசமாக, ஆரோக்கியமாக வாழ வேண்டும். அதுதானே உங்கள் இலட்சியம்!.

வேதாகமம் படிப்பது இம்மைக்காக மட்டுமல்ல (1கொரி 15:19) மறுமையிலும் நாம் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து நமக்கு ஆயத்தம் செய்திருக்கிற நித்திய வீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருடைய ஆளுகையில் பங்கு கொள்வதற்கும் ஆகும்.

ஆகவே என் நண்பனே, சகோதரியே! உன்னுடைய கிறிஸ்துவ ஓட்டம் வேதாகம உபதேசச் சட்டத்தின்படியும் நிபந்தனைகளின்படியும் பதிவு செய்யப்பட்ட ஓட்டம் தானா? தயவு செய்து வேதாகமத்தின் வெளிச்சத்தில் அதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் (தேவனுடைய உபதேசச் சட்டங்கள் அனைத்தையும்) முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப் பில்லாமலும் செய்யுங்கள்" (பிலி. 2:14-16).

**திருமறை ஆசான் நிறுவன ஆசிரியரும், எனது அன்புத் தந்தையுமான சகோ. செல்வநாயகம் அவர்கள் கர்த்தருக்குள் மரித்து (9.2.1993) 14 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, இம்மாபெரும் தேவதாசனின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

**- ஆசிரியர்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பத்தாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 7,8,9 - 2007 (திங், செவ், புதன்)

### சிறப்பம்சங்கள்

* கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
* ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
* பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
* கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
* வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
* குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
* பெண்களுக்கு தனி இடவசதி.
* சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **75 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி ?

நாம் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி என்ற தலைப்பின் கீழாக பாடங்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் சபை கூடி வருகின்ற இடத்தில் நீங்கள் இருந்தால் அது மிகவும் நல்லது. ஆனால், கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் இருக்க நேர்ந்தால், அங்கே சபை இருக்க வேண்டியது அவசியம். ஒரு வேளை சபை இல்லாத இடத்திற்கு நீங்கள் குடிபெயர்ந்து போக நேரும்போது, அங்கு சபை இருக்க வேண்டியது அவசியம். அதை ஆரம்பிப்பது நீங்களாக இருக்கலாம். இதைச் செய்வதற்கு நம்மை வழிநடத்தக்கூடிய பல காரியங்களை எங்களோடு சேர்ந்து படியுங்கள்.

நமது முயற்சிக்கு உதவியாக நாம் இப்போது "கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி?" என்று பார்ப்போம்.

முதலாவது, வேதாகமத்திலிருந்து, சபையைக் குறித்து, நாம் ஒவ்வொருவரும் வாசித்தறிந்து கொள்ளமுடியுமென்பதை திட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நாம் அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும். எல்லா மார்க்க கூட்டங்களிலிருந்தும் அதை வேறுபடுத்திக் காட்டக் கூடிய சில அடையாளங்கள் அங்கே உள்ளது. உதாரணமாக, நீங்கள் ஏதாவது ஒரு சபையில் அங்கமாக இருந்தால் அல்லது உங்களைச் சுற்றிலுமிருக்கும் சபையை நீங்கள் கவனித்தால், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சபையின் அடையாளங்களோடு, நீங்கள் சென்று கொண்டிருக்கும் சபை அல்லது, மற்ற சபைகளோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அது உண்மையாகவே கிறிஸ்துவின் சபையா அல்லது போலியானதா என்பதைக் கண்டு கொள்ளலாம்.

ஒரு சபையில் அங்கமாக இருப்பது, என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப்போகிறதென்பதை அறிந்து கொள்ள நீங்கள் விரும்பலாம். சபை முக்கியமானதல்லவென்றும், சபை ஒருவனை இரட்சிக்காது என்றும், எந்த சபையிலும் அங்கமாக இல்லாமலே ஒருவன் பரலோகம் செல்ல முடியு மென்றும் நீங்கள் வாதிடலாம். இந்த வாதம் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. உண்மையில் இது ஒரு சத்தற்ற வாதம். சபையானது முக்கியமற்றதாக இருக்குமானால், அல்லது எல்லா சபைகளும் ஒன்று என்றால், பின் எதற்காக கர்த்தர் தன் உயிரையே ஒரு சபைக்காகக் கொடுத்து, தன்னுடைய சபையை இந்தப் பூமியில் கட்டினார். சபை ஒருவனை இரட்சிக்காது என்பது உண்மை. ஏனெனில், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் தான் சபையாகும். ஆனால், கிறிஸ்து இரட்சகராக இருக்கிறபடியால், ஒருவன் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்வதற்கு, அவர் இரட்சகராக உள்ள சபையில் அங்கமாக இருக்க வேண்டியது அவசியம்.

இக்காரியத்தை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள, வேதாகமத் திற்குச் சென்று சபையின் அடையாளங்களை அறிந்து கொள்வோம். வெகு காலத்துக்கு முன்பே, தேவனுடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தமது ராஜ்ஜியம் அல்லது சபையை ஸ்தாபிக்கும் நாளைக் குறித்துப் பேசியுள்ளனர். ஏசாயா

தீர்க்கதரிசி இப்படிக் கூறியுள்ளார். "திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது, அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை". (ஏசா. 2:2,3) யோவேல் தீர்க்கதரிசி இந்த விதமாக எழுதியுள்ளார். "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது, உங்கள் குமாரரும் உங்கள், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28,29) தொடர்ந்து தானியேலும் இப்படிச் சொல்லியுள்ளார். "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழுப்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களி மண்ணையும் வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி 2:44) தேவனுடைய இந்த தீர்க்க தரிசிகளெல்லாம் என்ன சொல்கிறார்கள்? அவர்களனைவரும் ஏகோபித்த குரலில், கர்த்தருடைய ஆவிக்குரிய ராஜ்ஜியமாகிய சபை தோற்றுவிக்கப் படும் என்று சொல்லியுள்ளனர். இது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படுமென்றும், அங்கிருந்து கர்த்தருடைய வசனம் உலகெங்கும போகுமென்றும் உள்ளது. இது ஆவியின் பலத்தோடு வருமென்றும், இது ஒருபோதும் அழியாத தென்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்றும் சொல்லப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

இவைகள் அனைத்தும் கனகச்சிதமாக நிறைவேறியுள்ளது. எருசலேம் பட்டணத்தில், அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி சபையாக தோற்றுவிக்கப்பட்டு, நற்செய்தியானது உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த நாளிலே தானே சபையானது கட்டப்பட்டது. அந்நாள் முதல் சபையானது இருந்து கொண்டுள்ளது கிறிஸ்துவின் வருகை மட்டும் அது நிலைத்திருக்கும்.

இயேசு தமது சபையைக் கட்டுவேனென்று சொன்னார். (மத் 16:18) அப்போஸ்தலர்களின் உதவியோடு, தான் சொன்னபடியே அதைச் செய்தார். அவர்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழிநடத்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். (யோவா 16:13). பிறகு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு கொஞ்சம் முன்னதாக, அவர் இப்படிச் சொன்னார். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும்,

சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் என்றார். (அப். 1:8) சபையானது அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதென்று நாம் வாசிக்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தமாதிரி, கர்த்தருடைய சபை அல்லது இராஜ்ஜியம் எருசலேம் பட்ட ணத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று பெயர் முதலாய் குறிப்பிடப் பட்டுள்ளது. கர்த்தருடைய வசனம் இந்தப் பட்டணத்திலிருந்து எல்லா இடங்களுக்கும் போகுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் பார்த்து எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" என்று கூறியுள்ளார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில் திரளான ஜனக் கூட்டத்திற்கு பிரசங்கித்ததற்குப் பிறகு, பிரசங்கத்தைக் கேட்ட வர்களின் இருதயங்கள் குத்தப்பட்டு, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபொழுது, "பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று சொன்னான். அன்றைக்கு மூவாயிரம் பேர் அதின்படி செய்தனர். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார். (அப். 2:4).

இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளில், நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் 2-ல் நாம் வாசிக்கிறோம். பெந்தெகொஸ்தே பண்டிகை வாரத்தின் முதல் நாளில் வந்தது. இவைகளனைத்தும் தோராயமாக கி.பி. 33ல் நடந்தேறியது.

அப்போஸ்தலர்கள் கூடியிருந்தவர்களின் பற்பல பாஷைகளில் பேசும் படியாகவும், தாங்கள் தேவனுடையவர்கள் என்று அவர்கள் நம்பும்படி அற்பு தங்கள் நடப்பிக்கும்படியாகவும், தாங்கள் சகல சத்தியத்திற்குள்ளாகவும், வழி நடத்தப்படும்படியாகவும், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றனர். (அப். 1:8,2:1-4,8).

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், சபையென்பது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டதாக இருந்தது. அப். 2:41,47) இது உண்மையானால், சபையென்பது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவும், கிறிஸ்து அதற்குத் தலையாகவும் இருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலன் பவுல், "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலை யானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் என்று கூறியுள்ளார்". இன்னும் எபேசியர் 1:22, 23யும், எபே 5:23யும் வாசியுங்கள்.

கிறிஸ்துவின் இரத்தத்தாலே சபையானது வாங்கப்பட்டது. எபேசுவி லிருந்து மூப்பர்களுக்கு பவுல், "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை

மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று கூறியுள்ளார்". கிறிஸ்து சபைக்காக தன் உயிரைக் கொடுத்து மரித்து, அதற்கு இரட்சகராகவும் இருக்கிறாரென்றால், அதன் பொருள் என்ன? கிறிஸ்து மிக அதிகமான முக்கியத்துவத்தை சபைக்கு கொடுத்திருக்கிறாரென்பதுதானே. கிறிஸ்து சபைக்கு அஸ்திபாரமாக இருப்பாரென்று சொல்லப்பட்டுள்ளது. பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிட்டதற்குப் பிறகு அவர்கள் செய்த அறிக்கையின் மீது அல்லது அந்தக் கல்லின்மீது, கல்லாகிய தம்மீது தமது சபையைக் கட்டுவேன் என்று சொன்னார் (மத். 16:18) பவுல், போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது என்றுக் கூறியுள்ளார்". பேதுரு கிறிஸ்துவைக் குறித்து பிரதான மூலைக்கல் என்று குறிப்பிட்டுள்ளார். (1பேது 2:1-8).

சபையும், சபையின் அங்கத்தினர்களும் கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் இரட்சிப் பில்லை (அப். 4:12) ஆங்காங்கே உள்ள பிராந்திய சபையைக் குறித்து, வேதாகமம், கிறிஸ்துவின் சபைகள் என்று குறிப்பிடுகிறது. (ரோம 16:16) இது தேவனுடைய சபை என்றும் சொல்லப்பட்டுள்ளது. (அப். 20:28) கர்த்தரைக் கனப்படுத்தும் வேறு பெயர்களாலும் சொல்லப்பட்டுள்ளது. இதின் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். (அப். 11:26, அப். 26:28, 1பேது 4:10).

மனமாற்றம் அடைந்தவர்கள் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் படிக்கும்போது, இந்த கிறிஸ்துவின் சபைக்குள்ளாக எப்படி வருவதென்பது மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. நற்செய்தியைக் கேட்டபோது, தேவன் மீதும் கிறிஸ்து மீதும் விசுவாசம் வைத்தார்கள். பாவத்திலிருந்து மனந்திரும்பினார்கள். கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள். தங்களுடைய பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப். 2:38,2:47).

அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்து, கர்த்தரை ஆராதித்து, விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கிறிஸ்து தமது சபைக்காக திரும்ப ஒரு நாளில் வருவார் என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர் (எபே 5:27, 1 தெச 4:15-18).

ஆக, சபையானது வேதவசனங்களில் தெளிவாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது, கர்த்தருடைய சபையை நீங்கள் எப்படிக் கண்டுபிடிக்கலாம்? இப்பொழுது நாம் பார்த்த அதே அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிக்க முடியும். ஒரு சபையானது, தன்னைக் கர்த்தருடையது என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால் அதற்கு இந்த அடையாளங்கள் இல்லையானால் அது அவருடையது அல்ல, நீங்கள் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய சபை இல்லையானால், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்து, ஒருவரையோ அல்லது அதிகமானவர்களையோ மனமாற்ற மடையச்செய்வதின் மூலம், நீங்கள் கிறிஸ்துவின் சபையை அங்கே ஆரம்பம் செய்யலாம்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# சபையில் பெண்களின் பங்கு

சபை என்று வரும்போது பெண்களின் பங்கு என்ன என்பது குறித்து வேதாகமம் என்ன வலியுறுத்துகிறது என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

பெண்கள் விடுதலை இயக்கங்கள் என்றெல்லாம் இருக்கும் இந்த நவநாகரீக உலகில் சபையில் பெண்கள் இந்த பணிகளை மட்டுமே செய்ய வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது என்றோமானால், சிலர் உடனே கொதித்தெழுந்து நமக்கு ஆண் ஆதிக்கமுடையவர்கள், பெண்ணை வெறுக்கிறவர்கள், முதன்மையாக திகழவேண்டும் என்பதில் மூட ஆர்வம் கொண்டவர்கள் என்றெல்லாம் முத்திரை குத்திவிடுவார்கள். இது மார்க்க விஷயத்திலும் மற்ற எல்லாக் காரியங்களிலும் உண்மையான ஒன்றாயிருக்கிறது. அநேக பிரிவு சபை நண்பர்கள், பெண்களை தலைவர்களாகவும், பிரசங்கிகளாகவும், இன்னும் பல முன்னணி காரியங்க்ளிலும் ஈடுபட அனுமதிக்கிறார்கள். ஆனால், இதில் நாம் நமது விருப்பு, வெறுப்புக்கோ, உலகம் எப்படி நம்மை பார்க்கிறதென்பதற்கோ, அல்லது இன்னும் பல காரியங்களுக்கோ கவலைப்பட வேண்டிய கட்டாயமில்லை. மாறாக, இந்தக் காரியத்தைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை மட்டும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இதில் தான் நாம் ஆர்வமாயிருக்கிறோம். வேதாகமத்தில் என்ன போதிக்கிறது என்பதை அறிந்தவுடன் அதையே நாம் இறுதியான ஒன்றாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேவன், ஆணையும், பெண்ணையும் சிருஷ்டித்தார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அவர் ஒருவரை ஆணாகவும், மற்றொருவரை பெண்ணாகவும் படைத்தார். அதில் ஒருவர் தகப்பனாகவும், மற்றொருவர் தாயாகவும் செயல்படுகிறார்கள். நாம் இதை ஏற்றுக்கொள்கிறோம். அப்படித்தானே? ஒரு பெண், தகப்பனாக ஒரு குழந்தைக்கு இருக்க வேண்டுமென்று நினைப்பதோ அல்லது ஒரு ஆண், குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டுமென்று நினைப்பதோ எவ்வளவு அபத்தமாயிருக்கும். தேவன் அவர்களுக்கென்று ஒரு செயல்பாட்டை வரையறைந்திருக்கிறார். அவர்கள் அதை மாற்றவேண்டுமென்று எவ்வளவு ஆசையும், ஆவலும் கொண்டாலும் அவர்களால் அது முடியாத ஒன்று. உண்மையென்னவென்றால், தேவன் கொடுத்த பங்கை நாம் சந்தோஷத்துடன் செய்ய வேண்டும். ஆணின் பங்கு முக்கியம், அதுபோலத்தான் பெண்ணின் பங்கும், ஒருவர் இல்லாமல் மற்றொருவர் ஒன்றும் செய்யலாகாது.

வேதாகமம் தேவனை பிதா (தகப்பன்) என்று பறைசாற்றும்போது, அவரை பெண்மைப்படுத்துவது எவ்வளவு அர்த்தமற்ற காரியம் பாருங்கள். இயேசுவை பெற்றெடுத்த மரியாளின் பங்கை யார் மாற்றியமைக்க முற்பட முடியும்? இவைகள் எல்லாம் அறிவற்ற காரியங்கள் மற்றும் இவைகளை மனுஷனுக்கும் மனுஷிக்கும் பிரிவினை உண்டாக்கும் கருவியாய் சாத்தான் மிக மகிழ்ச்சியாய் பயன்படுத்துகிறான். அதன் விளைவாக இருவரும் ஒருவரையொருவர் மனதளவில் காயப்படுத்துகிறார்கள்.

ஆண், பெண் என்று வரும்போது அநேக காரியங்களில் பாகுபாடின்றி சரிநிகர் சமமாக நடத்தப்பட வேண்டும். உலகின் பல பகுதிகளிலும், பிரபலமான மதவட்டாரங்களிலும், பெண் சரியாக நடத்தப்படாமல், பின்னாக தள்ளப்பட்டு, ஆணுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாகவே நடத்தப் படுகிறாள் என்பது உண்மை. அநேக காரியங்களில், நமது பார்வை யிலிருந்தே அவள் அகற்றப்படுகிறாள். ஒன்றுக்கும் உரிமையில்லை, கடவுளை தொழுமிடத்திற்கு, பிள்ளைகளோடும், கணவனோடும் செல்லக்கூட அனுமதி இல்லை. ஆணானாலும், பெண்ணானாலும் சரி, இப்படி நடத்தப்படுவது எவ்வளவு, வேதனை தரக்கூடியதாய் இருக்கிறது பாருங்கள்.

ஆணையும், பெண்ணையும் குறித்து ஆவிக்குரிய ரீதியில் பரிசீலிக்க வேதாகமத்திற்கு நாம் செல்லும்போது, தேவன் ஒவ்வொருவருக்கும் தனித்துவம் வாய்ந்த பங்குகளை கொடுத்திருக்கிறார் என்பதை காணலாம். இந்த பங்குகள் ஒன்றோடொன்று இணையான முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் தேவன் ஆணையும், பெண்ணையும், ஒருவருக்கொருவர் எதிராக படைக்கவில்லை; தலைமைக்காகவும், பொறுப்புக்காகவும், ஒருவரோ டொருவர் போட்டிபோடக்கூடிய சூழ்நிலையில் அவர்களை தேவன் வைக்க வில்லை.

உதாரணமாக, கர்த்தர் பிரதான கட்டளையை கொடுத்தபோது, அவர் முதலாவதாக அப்போஸ்தலரிடம் (எல்லாரும் ஆண்கள்), உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை எல்லோருக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்ற கட்டளை கொடுத்தார். (மாற்கு. 16:15,16). ஆதித் திருச்சபையை வழிநடத்தவும். பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெறவும் அவர்களிடம்தான் வாக்குத் தத்தம் செய்யப்பட்டது. (அப். 2). பிறகு, பவுல் பிராந்திய சபையில் மூப்பருக்கும், உதவிக்காரர்களுக்கும், தேவையான தகுதிகளை கொடுத்தார் (1தீமோ. 3; தீத்து.1). மேலும் ஆண்கள் மாத்திரமே மூப்பராகவும், உதவிக்கார ராகவும் செயல்பட முடியும்.

அப்படியென்றால் இவைகளெல்லாம், தேவன் சபையிலோ அல்லது பொதுவாகவோ பெண்களை குறைத்து மதிப்பிட்டிருக்கிறார் என்று பொருள் தருமா? அவள் முக்கியமானவள் அல்ல என்று அர்த்தமாகுமா? கண்டிப்பாக அப்படியல்ல. உண்மையில், பெண்களின் பங்கு மிக முக்கியம். அநேகர் ஒப்புக்கொள்வதை விட அது அதிக முக்கியம் வாய்ந்தது. ஆண்கள் செய்யும் எல்லா வேலையும் செய்தால்தான் அவள் முக்கியமாவாள் என்ற நினைப்பு

வரும்போது, அவள் அந்த வேலைகளை செய்யமுடியவில்லை என்கிற போது, உடனடியாக அவளை நாம் மாறுபட்ட கோணத்தில் பார்க்க ஆரம்பிக்கிறோம். அது அவளை அநேகருடைய பார்வையில் மதிப்பு குறைய செய்கிறது. ஆனால், நாம் பெண்களை அப்படி எவ்வேளையிலும் பார்க்கலாகாது.

தொட்டில் ஆட்டுகிற பெண் உலகாள்கிறாள் என்ற பழமொழி உண்டு. அதாவது பெண், பிள்ளை பெற்று அவர்களை ஒழுங்குபடுத்த இவளுக்குத்தான் அதிக வாய்ப்புண்டு, ஆகவே தான் பிள்ளை மூலம் அவள் உலகாள்கிறாள் என்கிறார்கள். ஒவ்வொரு பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் தலைவருக்கும் அல்லது வேறு யாருக்கும் ஒரு தாயுண்டு. அதில் மிகச்சிறந்தது எதுவென்றால், தேவனின் சித்தப்படி பிள்ளைகளை வளர்த்து, அவர்களை, கிறிஸ்தவர்களாகவும், தலைவர்களாகவும், சபையில் முக்கியஸ்தர்களாகவும் உண்டாக்கும் வலிமை படைத்தவள் இந்தப்பெண் மற்றும் அவள் இப்படி உலகை நன்மைக்காக மாற்றியமைக்க முடியும்.

பெண்கள் சபையில், பிரசங்கியாகவோ, மூப்பராகவோ, உதவிக்கார ராகவோ இருக்கமுடியாதென்பது உண்மைதான். அவள் ஆராதனை வேளையிலும் அமைதலாய் இருக்க வேண்டும். அதாவது அதிகாரத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு ஆராதனையை முன்னின்று நடத்த முடியாது. (1கொரி. 14:28; 1தீமோ. 2:11,12). ஆனால் இது, அவர்கள் சபையில் பாடுவதை தடைசெய்கிறது அல்லது வேத ஆராய்ச்சி வகுப்புகளில் அவர்கள் வினா தொடுக்க தடை செய்கிறது என்றோ அர்த்தமாகாது. ஆனால், இது, அவர்கள் ஆரார்தனையை அல்லது ஜெபக்கூட்டத்தை நடத்துகிறவரை மதிக்க வேண்டும் என்று அர்த்தம் தரும்.

பவுல் தேவனால் அருளப்பட்டு இப்படி எழுதுகிறார். ஆகையால் இளவயதுள்ள விதவைகளிருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக் கடவர்கள், சபையானது உத்தம விதவைகளானவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதாயையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக்கூடாது. (1தீமோ. 5:14) மீண்டும் அவர் இப்படி சொன்னார். முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும் அவதூறு பண்ணா தவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களாயிருக்கவும், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ள வர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர் களும், தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர் களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமா யிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லி, (தீத்து. 2:3-5). பேதுரு இப்படியாய் புத்தி சொல்லுகிறார். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள், அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தி

யோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனை யின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படு வார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படி புருஷர்களே, மனைவி யானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள். மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். (1பேதுரு 3:1-9).

பவுல், கிறிஸ்துவையும், சபையையும், கணவனுக்கும், மனைவிக்கும் ஒப்பிட்டுப்பேசுகிறார். மனைவிகளே, கர்த்தருக்குக்க கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபே. 5:22-25).

நீங்கள் இருக்குமிடத்தைப் பற்றி சிந்திக்கையில், ஒருவேளை, நீங்கள் பெண்ணாக இருந்து, ஒரு சபையை ஆரம்பிக்க முற்பட்டால், உங்களால் என்ன பங்காற்ற முடியும்? நீங்கள் பலதரப்பட்ட மக்களோடு வேதத்தை படிக்க வேண்டும். யாராவது ஒருவர் தேவனுக்கு கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கை யோடு இதை செய்ய வேண்டும். ஒரு பெண்ணாக இருந்து மற்ற பெண்களை மனமாற்றமடையச் செய்தீர்கள் என்றால், அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கலாம். ஆண்கள் சபையின் அங்கத்தினராகிற வேளையில் அவர்கள் ஆராதனையை முன் நின்று நடத்தலாம். பெண், பெண்கள், மற்றும் சிறுபிள்ளைகள் வகுப்பு நடத்தவே ஆண்டவரால் அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள். தனிப்பட்ட ரீதியில் ஒரு பெண், ஆணுக்கும், பெண்ணுக்கும், போதிக்கலாம். நாம் பார்த்த இந்தக் காரியங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். மீதி காரியங்களை தொடர்ந்து அடுத்த மாதம் பார்ப்போம்.

**B.B. CHOATE** **J.C. ரேச்சல் ராஜநாயகம்**

# வரிக்குதிரை

சிறுவர் பகுதி

எனதருமை சிறுதம்பி தங்கைககளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.

சரி, இம்மாதம் வரிக்குதிரைகளிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளப்போகிறோம்.

வரிக்குதிரைகளைப் பற்றி உங்களுக்கு ஏதாவது சில காரியங்களாவது தெரிந்திருக்கும் என நம்புகிறேன். அவைகள் நாம் நேரில் பார்க்கவில்லையென்றாலும், நாம் பார்க்கும் தொலைக்காட்சிகளில் அவைகளை காட்டாமலிருப்பதில்லை. சரி உங்களிடம் அவைகளைப் பற்றிய ஒன்றை கேட்கிறேன்.


அவைகள் கருப்பு நிறம் உடம்பை கொண்டு வெள்ளை வரிகளை கொண்டனவா? அல்லது வெள்ளை நிற உடம்பை கொண்டு அவற்றின் மீது கருப்பு வரிகளை கொண்டனவா?

உடனே கருப்பு நிற உடம்பின் மேல் வெள்ளை வரிகள் என்று தான் சொல்வீர்கள். அப்படித்தானே? அந்த வரிகள் முழுதும் முடிகளால் ஆனாது. எனவே நீங்கள் எப்படி நினைத்தாலும் தவறு தான்! அவைகளுக்கு வெள்ளை, கருப்பு வரிகள் மாறி மாறி அமைக்கப்பட்டுள்ளன.

சரி, உங்களுக்கு இன்னொரு கேள்வி. ஏன் வரிக்குதிரைகளுக்கு வரிகள் உள்ளன. ஏன் தேவன் இவைகளுக்கு விநோதமான ஒரு அடையாளத்தை கொடுத்திருக்கிறார்? இதற்கு அநேகராலே அநேக காரணங்கள் கொடுக்கப் படுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் பார்ப்போம்.

இந்த வரிகளைப் பற்றின ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு! எப்படி நம் கைகளின் ரேகைகள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக உள்ளதோ அதைப் போல தான் வரிக்குதிரைகளின் வரிகள் ஒவ்வொரு வரிகுதிரைக்கும் வித்தியாசமாகவே உள்ளது.

இந்த விஷயம் ஆச்சரியமாகவே உள்ளது. அப்படித்தானே? சரி இதனால் என்ன பயன்! என்று கேட்கிறீர்களா? எப்படி நாம் மனிதர்களை கை ரேகைகளை வைத்து பிரித்து வேறுபடுத்துகிறோமோ அதைப் போல தான் வரிக்குதிரைகளின் வரிகள் அவைகளை வேறுபடுத்த உதவுகின்றன.



இந்த வரிகள் இன்னொரு விதத்திலேயும் வரிக்குதிரைகளுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. எப்படி என்று கேட்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள்! அந்த வரிகள் தொந்தரவு கொடுக்கும் சிறு பூச்சிகளிடம் இருந்து விடுபடுவதற்கு உபயோகமாக உள்ளதாம். ஏன் என்றால் பூச்சிகளுக்கு எங்கே அமருவது என்ற குழப்பம் இந்த வரிகளால் ஏற்பட்டு விடுகிறதாம். எனவே, பூச்சிகளிடமிருந்து வருகிற எந்த நோயும் வரிக்குதிரைகளுக்கு வரவே வராது! பாருங்கள். வியப்பாக தானே உள்ளது.

இந்த வரிகளின் இன்னொரு சிறப்பம்சம் எது என்று கேட்டால் மற்றவர்களை ஏமாற வைக்கும் தன்மை. நான் மற்றவர்களை என்று சொல்லும் போது மற்ற மிருகங்களை பற்றி சொல்கிறேன். அதிலும் குறிப்பாக சிங்கம் போன்ற மற்ற மிருகங்களை உணவுக்காக தாக்கும் மிருகங்களைப் பற்றி தான் சொல்கிறேன். எப்படி சிங்கங்களை இந்த வரிகள் ஏமாற செய்கிறது தெரியுமா? பொதுவாக சிங்கம் ஒரு நேரத்தில் ஒரு மிருகத்தைத் தான் தாக்கும். ஆனால், வரிக்குதிரைகள் கூட்டமாக நின்றால் சிங்கங்கள் குழம்பி போய் விடுமாம். ஏனென்றால் வரிவரியாக தெரிவதால் ஒரு வரிக்குதிரையை மட்டும் சிங்கத்தால் அடையாளம் கொள்ள முடியாதாம். மேலும் வரிக்குதிரை எவ்வளவு பெரியது என்று கூட சிங்கங்களால் கண்டு கொள்ள முடியாதாம். பாருங்கள் இந்த வரிகள் எவ்வளவு வியப்பான காரியங்களுக்கு காரணமாயி ருக்கிறதென்று!

சரி, இந்த வரிக்குதிரையை பற்றி இவ்வளவு காரியங்களை கற்றுக் கொண்டோமே! இதை படைத்தது யார்? ஆம் நமது பிதாவாகிய தேவன் தான். பாருங்கள். அவருடைய சிருஷ்டிப்பின் மகிமையை இப்படிப்பட்ட காரியங்களை செய்யும் வல்ல தேவன் தான் நம் தேவன். அது நமக்கு ஆசீர்வாதம் தானே! நிச்சயமாக ஆசீர்வாதம் தான்.

**R.A.R. NAYAGAM**

# ⋯⋯ தேவனுக்குப்பிரியமான ஆராதனை ⋯⋯

உலகில் உள்ள எல்லா மக்களும் ஏதோ ஒரு விதத்தில் தேவனை ஆராதித்துக் கொண்டுதான் உள்ளனர். ஆனால், யாரை ஆராதிக்கின்றோமோ அவர் அதில் பிரியப்பட வேண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமல்லவா? வேதத்தின் வெளிச்சத்தில் பரலோகத்தின் தேவன் எப்படிப்பட்ட ஆராதனையை விரும்புகிறார் எனப்பார்ப்போம் வாருங்கள். வேதத்தில் அநேக விதமான ஆராதனைகள் காணப்படுகின்றன அவற்றை நாம் சற்று ஆராய்வோம்.

**I <u>அறியாமையின் ஆராதனை</u>**

இன்று ஏதென்ஸ் என்று அழைக்கப்படும் பட்டணம் முதல் நூற்றாண்டில் புகழ்பெற்ற ஒரு பட்டணமாயிருந்தது. இங்கே ஞானிகள் அதிகமாக இருந்தனர். (எப்பிகூரர், ஸ்தோயிக்கர்) கிரேக்கத் தத்துவஞானி சாக்ரடீஸீம் இப்பட்டணத்திலிருந்தார் என உலக வரலாறு கூறுகிறது. இப்பட்டணத்து மக்கள் மிகவும் பக்தி உள்ளவர்களாக காணப்பட்டனர். அதனால்தான் வழிபாட்டிற்காக பூமியிலுள்ள சகல உருவங்களிலும், பறவைகள் மற்றும் மிருகங்களைப்போலவும் தேவனுக்காக உண்டாக்கினது மன்றி ஒருவேளை நாம் உருவாக்காத வேறு ஏதாவது ஒரு வடிவத்தில் இருந்து அதை நாம் அறியாதிருந்தால் என்ன செய்வது என்றுணர்ந்து (அப். 17:23) ஒரு பலிபீடத்தைக்கட்டி அதில் அறியப்படாத தேவனுக்கு என்றெழுதி வைத்து ஆராதித்தனர். அத்தேனே பட்டணத்து மக்கள் மட்டுமா தேவனை அறியவில்லை நம் நாட்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் தான். அறிந்திருந்தால் அழியாமையுள்ள தேவனை (ரோமர் 1:21-23) அழிந்து போகிறவைகளுக்கு ஒப்பாக மாற்றி தேவகோபத்தை தேடிக் கொள்வார்களா சங்கீதம் (135:15-18) அவைகள் மனிதர்களின் கைவேலையாயிருக்கிறது. தேவன் நிச்சயமாக இதை விரும்பவில்லை யாத்திராகமம் (20:3-5) வசனங்களில் வாசித்துப்பாருங்கள்.

“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தை யாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தரா யிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளை களிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக் கிறேன். சரி, நாம் எப்படி தேவனை ஆராதிக்க வேண்டும் தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ள வேண்டும்” என்று (யோவான் 4:24)ல் நாம் வாசிக்கிறோம். அதாவது, சரியான மனநிலை

யோடும் வசனத்தின்படியும் நாம் தேவனை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். ஆனால், உண்மையென்ன வென்றால் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களும் ஏதோ சில உருவங்களையும், படங்களையும் வைத்திருக்கின்றனர். இதில் தேவன் பிரியப்படுவாரா? வேதவசனம் என்ன சொல்லுகிறது எனக் கேளுங்கள் (அப். 17:29) மனிதனின் சிந்தையில் உருவான எதுவும் தேவனுக்குச் சமமாகாது. பிரியமானவர்களே எபேசு பட்டணத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தில் மனந்திரும்பின மந்திரவாதிகள் தங்கள் செய்கைகளை எப்படி வெளிப்படுத்தினர்? (அப். 19:17-20) தங்கள் மாய வித்தை புத்தகங்களை தீயிலே சுட்டெரித்தனர். பிரியமானவர்களே, உங்கள் இல்லங்களில் அப்படி ஏதாவது இருந்தால் உடனே அவைகளை அப்புறப்படுத்துவோம். அது அறியாத ஆராதனை மட்டுமல்ல தேவன் 1கொரிந்தியர் 10:14ன் படி அவைகளுக்கு நாம் விலகி ஓட வேண்டும் என விரும்புகிறார்.

## II வீணான ஆராதனை

பெற்றோரை பிள்ளைகள் மதிக்க வேண்டும் அவர்களின் வயோதிக காலத்தில் நிர்கதியாக அவர்களை விட்டு விடக்கூடாது அது பிள்ளைகளின் வாழ்வையும் பாதிக்கும் (எபேசியர் 6:1-3) இது தான் தேவனின் உபதேசம் ஆனால், வேதபாரகர் என்ன போதித்தனர் என்றால் நீங்கள் கொர்பான் எனும் காணிக்கையைக் கொடுத்துவிட்டால் உங்கள் பெற்றோரை பராமரிக்கா விட்டாலும் அதுபாவமல்ல என்று போதித்தனர் இப்படி ஒரு போதனையை தேவன் கொடுக்கவே இல்லை. பரலோக தேவசித்தம் வேறு, பாவ மனித கற்பனை வேறு இந்த உபதேசம் நன்றாயிருக்கிறது வேதத்தில் இல்லா விட்டாலும் நமக்கு நன்றாயிருக்கிறது என மனித கற்பனைகளுக்கு மக்கள் செவி சாய்ப்பதால் தான் இன்றைக்கு ஆரோக்கியமான உபதேசத்தை மக்கள் ஜீரணிக்க கஷ்டப்படுகின்றனர். II தீமோத்தேயு 4:3ல் நாம் பார்க்கும்போது சுய இச்சையான திரளான தூரமாய் விலகி இருக்கும் இது வீணான ஆராதனை இதிலும் தேவன் பிரியப்படமாட்டார். இதனை எப்படி புரிந்துகொள்வது 1பேதுரு 4:11ன்படி ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன் என்ற முறையில் உள்ளதை மட்டும் போதிக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவர் எப்பொழுது பரிசுத்த ஆவியானவர் தந்த வார்த்தைகளில் உள்ளவற்றை ஆம் என்றும் வேதத்தில் இல்லாதவற்றை இல்லை என்றும் சொல்லுகிற தைரியம் அடைகிறாரோ அப்போதுதான் அவர் மெய்யான ஆராதனையை கண்டுபிடிக்க முடியும்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நமக்குப் பரிசுத்த வேதத்தின் மூலம் தேவன் என்ன சொல்கிறார் என கவனிக்க வேண்டும். இல்லையெனில் கொலோ 2:19ன்படி நாம் பந்தயப் பொருளாகிய நித்திய ஜீவனையே இழந்து போகும் வாய்ப்பு இருக்கிறது. நாம் கிறிஸ்துவுடனே இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்துவிட்டோம் (கலாத்தியர் 4:8,9) வசனங்களின்படி

நாம் தேவனை அறியாத காலத்தில் அப்படிச் செய்திருக்கலாம் ஆனால் இப்போது அப்படிச் செய்ய நமக்கு அதிகாரமில்லை. அப்படிச் செய்தால் அவைகள் மீண்டும் நம்மை அடிமைப்படுத்திவிடும்.

## III புத்தியுள்ள ஆராதனை

ரோமர் 12:1,2 வசனங்களில் நாம் பார்க்கும்போது உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று வாசிக்கிறோம். பலி என்பது என்ன? ஒரு பறவையையோ, அல்லது ஆட்டையோ தேவனுக்காக கொன்று பலி செலுத்துவது. அதாவது அந்த ஆடு இனி உயிர் வாழாது. சரி ஜீவ பலி என்றால், உயிரோடு இருந்து கொண்டே தேவனுக்காக இவ்வுலகத்திற்கு மரித்தவர்களைப் போல வாழ்வது. (கொலோசெயர் 3:3-5)ல் நாம் வாசிக்கும் போது ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது ஐந்தாம் வசனத்தில் ஆகையால் விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். கலாத்தியர் 5:24ல் நாம் நமது மாம்சமும் மனதும் விரும்பும் பரிசுத்தமில்லா காரியங்களை கொன்று போட வேண்டும் என்று பார்க்கிறோம். 1கொரிந்தியர் 6:20ன்படி இயேசுவின் இரத்தம் நமக்காய் சிந்தப்பட்டு நாம் விடுதலையாக்கப்பட்டோம். நாம் மீண்டும் பாவ வாழ்க்கையில் சிக்கிக் கொள்ளகூடாது. 1 கொரிந்தியர் 3:16,17ன்படி நாம் தேவன் வாசஞ்செய்யும் ஆலயமாயிருக்கிறோம். இப்படிப்பட்ட சிந்தையோடும், தேவனைப் பற்றிய பயத்தோடும் கிறிஸ்து நமக்காக சுகந்த வாசனையான பலியானார். நாமும் அப்படி வாழ்ந்து தேவனை ஆராதிப்பதே புத்தியுள்ள ஆராதனை நாம் அப்படிச் செய்து தேவனின் அளவில்லாத ஆசீர்வாதங்களுக்கு சொந்தக்காரர்கள் ஆவோம் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.!

**பென்னிமார்ட்டின்**

## *நியாயப்பிரமாணத்தின் கீழ் நாம் இல்லை*

- ✧ கிறிஸ்து அதை சிலுவையில் ஆணியடித்தார் [கொலோ 2:14,15]
- ✧ பிரமாணத்தினின்று விடுவிக்கப்பட்டோம் [கலா 3:13]
- ✧ பிரமாணத்திற்கு மரித்தோம் [ரோ. 7:1-7]
- ✧ பிரமாணத்தினின்று விடுவிக்கப்பட்டோம் [ரோ. 8:1,2]
- ✧ பிரமாணம் உருவழிந்து போனது [எபி. 8:13]

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் நாம் படித்த வசனங்கள் ஆராதனையின் ஒரு பங்காகிய ஞானப்பாட்டுகள் பாடுவதை வெளிப்படுத்தின. புதிய ஏற்பாட்டில் நாம் இப்படிப்பட்டப் பாடல்களை இசைக் கருவிகளை பயன்படுத்தாமல் (அதாவது பியானோ, ஆர்கன், சுரமண்டலம் போன்ற எந்த இசைக் கருவிகளையும் பயன்படுத்தாமல்) பாடத்தான் நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை தேவன் வெளிப்படுத்துகிறார். ஆகவே நாம் ஞானப்பாட்டுகளைப் பாடும்போது இசைக் கருவிகளை சேர்த்துக் கொண்டால் நாம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறோம்! கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டிலிருந்து அப்படிச் செய்ய நமக்கு அதிகாரம் இல்லாததால் நாம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறோம் (கொலோ 3:17) அதுமாத்திரமல்ல தேவனுடைய வார்த்தையோடும் நாம் எதைக் கூட்டினாலும் நாம் பாவம் செய்கிறோம் (வெளி. 22:18,19).

இந்த மாதம் அநேகக் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டு ஆராதனையில் பாடல் பற்றி நாம் படிக்கத் தொடங்குவோம். இதோ முதல் கேள்வி?

ஆராதனையில் நாம் பாடல் பாடுவதின் நோக்கம் என்ன?

உண்மையில், ஆராதனையில் நாம் பாடல்பாடுவதற்கு அநேக நோக்கங்கள் இருக்கின்றன. ஒருவர் துதியையும், நன்றியையும் தேவனுக்கு ஏறெடுக்க வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:25ல் நாம் வாசிக்கும் போது இங்கே பவுலும், சீலாவும் நடுராத்திரியில் சிறைச்சாலையில் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்.

எபிரெயர் 13:15ல் நாம் தேவனுக்கு ஸ்தோத்திர பலியை செலுத்த கட்டளைப் பெற்றிருக்கிறோம் தேவன் அந்த ஸ்தோத்திர பலியை உதடுகளின் கனி என்று விவரிக்கிறார். தெளிவாக இது தேவனுக்கு நாம் ஏறெடுக்கும் ஸ்தோத்திர பாடல்களை உள்ளடக்கும். எனவே நாம் ஞானப்பாடல்களைப் பாடும்போது தேவனை ஸ்தோத்தரிக்கும் பாடல்களைப்பாடி அவர் நமக்கு செய்த, தொடர்ந்து செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணின எல்லா காரியங்களுக்காகவும் நம்முடைய ஆழ்ந்த நன்றியை செலுத்த வேண்டும்.

யாக்கோபு 5:13யை நாம் வாசிக்கும்போது மகிழ்ச்சியாயிருக்கிற கிறிஸ்தவர்களைப் பற்றி எழுத தேவன் யாக்கோபை ஏவினார். கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாயிருந்தால் அவர்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன? நாம் சங்கீதம் பாட வேண்டும்.

ஆராதனையில் நாம் பாடல் பாடுவதின் இன்னொரு நோக்கம் என்ன வென்றால் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும்.

எபேசியர் 5:19ல் நாம் வாசிக்கும்போது சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் என்று தேவன் உங்களுக்கும் எனக்கும் கட்டளையிடு கிறார். இது நிச்சயமாகவே சபையானது தேவனை ஆராதிக்க கூடி வரும் போது செய்யப் படவேண்டியதைக் குறித்துதான் பேசுகிறது. எனவே, ஆராதனையின் போது நம்முடைய பாடல்களானது தேவனை துதிப்பது, நன்றி செலுத்துவது என்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் இந்த பாடல்கள் மூலமாக நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்கிறதாகவும் இருக்க வேண்டும்.

கொலோசெயர் 3 :16யை நாம் வாசிக்கும்போது மறுபடியும் தேவன் அவரை ஆராதிக்க நாம் ஒன்றாக கூடும்போது நாம் ஏறெடுக்கும் பாடலைப் பற்றி பேசுகிறார். சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவுருக் கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு நம்முடைய இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாட வேண்டும் என்று சொல்கிறார்.

இங்கே இன்னொரு கேள்வி எழும்புகிறது.

ஆராதனையில் நாம் எப்படிப்பாட வேண்டும்?

1 கொரிந்தியர் 14:15யை நாம் வாசிக்கும்போது நாம் ஆவியோடும் கருத்தோடும் பாடவேண்டும் என்று தேவன் சொல்கிறார்.

நம்முடைய ஆவி என்பது நம்முடைய உள்ளார்ந்த மனிதனாகும். இது நம்முடைய சரீரத்தை கட்டுப்படுத்த தேவன் நமக்கு தந்திருக்கிற மனிதனின் யோசிக்கின்ற, உணர்வுள்ள பகுதியாகும். எனவே நாம் தேவனை ஆராதிக்கும் போது நாம் எதைப்பாடுகிறோமோ அதை யோசித்து உணர்ந்து பாட வேண்டும். அதாவது, நாம் பாடுகின்ற பாடல்களின் வார்த்தைகளை மிக ஜாக்கிரதையாக கவனித்துப் பாட வேண்டும். நாம் பாடல்களை பாடும் போது எதையோ நினைத்துக் கொண்டு பாடக்கூடாது. நாம் பாடுகின்ற பாடலின் அர்தத்தைப் புரிந்து பாடுகிறோமோ என்று நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்ய நாம் தவறினால் நாம் வீணான ஆராதனை செய்கிற வர்களாயிருப்போம். (யோவான் 4:24; மத்தேயு 15:7-9)

இதோ மூன்றாவது கேள்வி எழும்புகிறது.

ஞானப்பாடல்களைப் பாடும்போது பியானோ, ஆர்கான், சுரமண்டலம் போன்ற இசைக்கருவிகளை உபயோகப்படுத்துவது எப்படி?

ஞானப்பாடல்களை நாம் பாடும்போது இசைக்கருவிகளை நாம் உபயோகப்படுத்த தேவன் நமக்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்று நாம் ஏற்கனவே பார்த்தோம்.

ஆனால், ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த, அதை நியாயப்படுத்த சிலர் செய்யும் அடிப்படையான வாக்குவாதங்கள் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு வாக்குவாதம் என்னவென்றால் பாடிக்கீர்த்தனம் பண்ணி என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற கிரேக்க பதம் (இது எபேசியர் 5:19ல் இடம் பெற்றிருக்கிறது) இசைக்கருவிகளை உபயோகப்படுத்தி பாடல்கள் பாடுவது என்று பொருள்படும் என்கின்ற வாக்குவாதம்.

இன்னும் ஒரு சிலர் புதிய ஏற்பாடு இசைக்கருவிகள் பயன் படுத்துவதை தடைசெய்யவில்லை. எனவே, நாம் ஞானப்பாடல்களைப் பாடும் போது இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதையும் தெரிந்து கொள்ளலாம் அதை தெரிந்து கொள்ளாமலும் இருக்கலாம் என்று சொல்கின்றனர்.

இந்த வாக்குவாதங்கள் எல்லாம் செல்லுபடியாகுமா என்று நாம் நிர்ணயிக்க வேண்டும். இந்த வாக்குவாதங்கள் நாம் சற்று விவரமாக ஆராய்வோம்.

முதலாவது எபேசியர் 5:19ல் "பாடிக்கீர்த்தனம்" பண்ணி என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற "ஸாலோ" என்கின்ற கிரேக்க பதத்தின் அர்த்தத்தை நாம் ஆராய்வோம்.

வரலாற்றின் பல காலக்கட்டங்களில் இந்த ஸாலோ என்கிற பதம் பல்வேறு அர்த்தங்களைக் கொடுத்து வந்திருக்கிறது ஆனால் இங்கே முக்கியமான கேள்வி என்னவென்றால் தேவன் புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்திய காலக்கட்டத்தில் இந்த "ஸாலோ" என்கிற கிரேக்க பதம் என்ன பொருள் கொடுத்தது? புதிய ஏற்பாட்டின் காலத்தில் இந்த "ஸாலோ" என்கின்ற கிரேக்க பதம் இசைக்கருவிகளை இசைக்காமல் பாடல் பாடுவதைத் தான் குறிக்கிறது. அந்த பொருள் தான் தருகிறது என்பதற்கு தெளிவான சாட்சியங்கள் இருக்கிறது.

இந்த உண்மையானது கீழ்க்காணும் ஆதாரங்களால் உறுதிய செய்யப்படுகிறது.

1 ஜேம்ஸ் தேயர், புதிய ஏற்பாட்டின் கிரேக்க - ஆங்கில அகராதி

2 அபோட் ஸ்மித், புதிய ஏற்பாட்டின் கிரேக்க அகராதி

ஐந்தாவது இந்த ஆச்சரியமான உண்மையை கருத்தில் கொள்ளுங்கள் E.A. SOPHOCLES என்பவர் கிரேக்க நாட்டைச் சார்ந்தவர் இவர் அமெரிக்காவிலுள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் 38 வருடங்களாக

கிரேக்க பேராசிரியராக பணிபுரிந்தார். அவருடைய ஆழ்ந்த ஆராய்ச்சியில் "ஸ்ாலோ" என்கிற பதம் ஒருபோதும் இசைக்கருவிகளுடன் பாடல் பாடுவது என்ற அர்த்தத்தைக் கொடுக்கவில்லை. மாறாக இந்த வார்த்தை இசைக் கருவிகளை இசைக்காமல் பாடல்கள் பாடுவதைத்தான் குறிக்கிறது என்று தன்னுடைய ஆராய்ச்சியில் கண்டு கொண்டார்.

உண்மையாகவே எபேசியர் 15:19ல் தேவன் நாம் ஞானப் பாடல்களை பாடும்போது உபயோகப்படுத்த வேண்டிய கருவியை அடையாளம் காட்டியிருக்கிறார். அது மனித இருதயமாயிருக்கிறது! தயவு செய்து அந்த வசனத்தை இன்னொரு முறை வாசித்துப்பாருங்கள்.

நாம் தேவனை நம்முடைய இருதயத்தில் பாடிக்கீர்த்தம் பண்ண வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் ஸ்தோத்திரப் பாடல்களையும், நன்றி பாடல்களையும் பாடி ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லும் போது நாம் பாடுகின்ற பாடலின் வார்த்தைகளை நம்முடைய இருதயத்திலே உணர்ந்து பாட வேண்டும். அந்த வார்த்தைகள் நம்முடைய இருதயத்தில் ஒரு தாக்கத்தை உண்டு பண்ண வேண்டும். நாம் ஏற்கனவே பார்த்தபடி இது தேவன் நாம் ஆவியோடும், கருத்தோடும் பாட வேண்டும் என்று நமக்கு கட்டளையிடுவதோடு ஒத்துப்போகிறது.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் அநேக கேள்விகளைப் பற்றி நாம் படிப்போம். அதுவரை ஜெபித்து தேவனுக்கு பிரியமாக நடந்து கொள்ள முயற்சிப்போம்.

**BENNY MARTIN** **CHARLIE DIPALMA**

## நாளும் நடப்பும்

1. **இன்னும் 5 ஆண்டுகள் ஜனாதிபதியாக அப்துல்கலாம் இருக்கலாம் என்பது பெரும்பாலான மக்களின் கருத்து.**
2. **உலக அதிசயங்களில் ஒன்றான சீன பெருஞ்சுவரின் நீளம் இன்னும் சில மாதங்களில் வெளியிடப்படும் சீன புள்ளியியல் துறை தகவல்**
3. **இரட்டை அடுக்கு இரயில்கள் அறிமுகமாகும் – ரயில்வே மந்திரி லாலுபிரசாத் தகவல்**
4. **வட இந்தியாவில் மழை கடும் குளிருக்கு 14 பேர் பலி**
5. **காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு கர்நாடகத்தில் கடும் எதிர்ப்பு**
6. **பிலிப்பின்ஸ் நாட்டில் சூரிய சக்தியால் இயங்கும் கார் அறிமுகப்படுத்தப்பட்டு, "சினாக்" என்று பெயரிடப்பட்டது.**
7. **இலங்கைக்கு இந்தியா ரூ. 450 கோடி கடன் உதவி வழங்குகிறது.**
8. **மேற்கிந்திய தீவுகள் அணியை 3-1 என்ற எண்ணிக்கையில் இந்தியா வென்று கோப்பையை கைப்பற்றியது.**

# இரட்சிப்பு என்று ஒன்று உண்டா?

இன்று உலகில் அநேகர் குறிப்பாக படித்தவர்கள் மத்தியில் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி உண்மையாகவே இரட்சிப்பென்று ஒன்று உண்டா? என்பதாகும். ஆங்கிலத்தில் - REDEMPTION மீட்பு, - SALVATION இரட்சிப்பு; FORGIVENESS OF SIN பாவமன்னிப்பு என்ற வார்த்தைகள் இரட்சிப்பைக் குறிக்கின்ற வெவ்வேறு வார்த்தைகள்.

பாவமன்னிப்பைக் குறித்து அநேக போதனைகள் உலகில் உண்டு. எல்லா மதங்களும், மார்க்கங்களும் தீமை விட்டு மனந்திருந்தி நீதியான வழியில் வாழ வேண்டுமென்று போதிக்கின்றன.

இதிலிருந்து வாழ்க்கையில் நீதியும், அநீதியும் உண்டு என்பது நன்கு தெரிகின்றது. இந்த அநீதியிலிருந்து, அதாவது பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவதுதான் இரட்சிப்பு.

யார் மனிதனை அவனுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கக்கூடும்?

இன்று உலகில் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் அபாயத்திலிருந்து யார் நாட்டைக் காப்பாற்ற முடியும்? என்ற கேள்வி எழும்போது, ஒரு குறிப்பிட்ட தலைவரால் தான் முடியும் என்று பெரும்பான்மை மக்கள் சொல்லுவதைக் கேட்கிறோம். அதுபோலவே மனுக்குலத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க கடவுளின் திட்டத்தினால் மட்டுமே முடியும். தேவன் மனிதனையும், மனுஷியையும் உண்டாக்கி அவர்களுக்கு ஆதாம், ஏவாள் என்று பெயரிட்டு ஏதேன் தோட்டத்தில் சகல ஆசீர்வாதங்களுடன் வைத்தார், ஆனால், இருவரும் சாத்தானின் வஞ்சனையால் விலக்கப்பட்ட கனியைப் புசித்தபோது பாவம் முதலாவது மனுக்குலத்திற்குள் பிரவேசித்தது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஏதாவது ஒரு பாவம் அவரை தேவனிடமிருந்து பிரித்து உலக அநீதியில் கொண்டு போய் விடுகின்றது ரோமர் 3:23.

கடவுள் இந்த மனுக்குலத்தை முற்றிலும் இரட்சிக்க சித்தங் கொண்டு நம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த பூவுலகுக்கு அனுப்பினார். வேத புத்தகத்திலே இயேசு என்றால் அவர் நமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று மத்தேயு 1:21ல் சொல்லப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்ததன் நோக்கம் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது என்று 1தீமோத்தேயு 1:15ல் பவுலடியார் தெளிவாக குறிப்பிடுகின்றார்.

ஆக எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (கடவுள்) சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று 1தீமோத்தேயு 2:4ல் குறிப்பிடுகின்றார்.

இவைகளை கூர்ந்து நோக்குங்கால் தேவன் மனுக்குலத்தின் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பதையும், அவர்களைச் சகல பாவத்தினின்றும் மீட்டு மகிழ்ச்சியாக வாழச் செய்ய சித்தமுள்ளவராயிருப்பதையும் அதன் பொருட்டே தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தீர்த்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே மரணத்தை வென்று உயிர்த்தெழச் செய்தார் என்பதையும் தெளிவாக அறியமுடியும்.

இந்த மாபெரும் உண்மைகள், நிச்சயமாகவே இரட்சிப்பு உண்டென் பதை பறை சாற்றுவதை ஐயமற உணர முடியும். இந்த இரட்சிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்போம்.

1. முதலாவது இரட்சிப்பைக் குறித்த உண்மைகளைத் தெளிவாகக் கேட்டு புரிந்து விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் ரோமர் 10:17

விசுவாசம் என்றால் என்ன?

நீங்கள் கடவுளிலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினாலும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வேத வாக்கியங்களை நம்பி அதன்படி செயல்படுவதே விசுவாசம். பின்வரும் வேத வாக்கியங்கள் இதை நமக்கு தெளிவுபடுத்தும்.

1. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறாரென்றும் விசுவாசிக்க வேண்டும். எபிரெயர் 11:6.

2. ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் - யோவான் 8:24.

3. ஆனால் விசுவாசம் மட்டுமே உங்களை இரட்சித்து நீதிமானாக்கப் போதுமானதல்ல என்ற உண்மையை யாக்கோபு 2:24ல் காண்கிறோம்.

4. அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே இரட்சிக்கும் என்ற சத்தியத்தை கலாத்தியர் 5:6ல் வாசிக்கிறோம்.

தேவனுக்கேற்ற துக்கம் உங்களை பாவத்திலிருந்து மனந்திரும்பி வாழ வழிநடத்த வேண்டும்.

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இட மில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. II கொரிந்தியர் 7:10.

5. நாம் விசுவாசித்து மனந்திருந்தியதற்குப் பின்பு இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும். பின்வரும் வேத வாக்கியங்கள் இதைத் தெளிவாக்குகிறது.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் ரோமர் 10:10.

6. இரட்சிக்கப்படும்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும்.

அ) விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான். (மாற்கு 16:16)

ஆ) இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். அப்போஸ்தலர் 22:16.

இரட்சிக்கப்படுவதற்கு மேற்சொல்லப்பட்டிருக்கும் வேத வாக்கியங் களைப் படித்து விசுவாசித்து மனப்பூர்வமாக இவைகளின்படி செயல்பட்டால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியம் இதில் நாம் எதையாவது முன்னுக்குப் பின் முரணாகச் செய்வது வேதத்துக்கு மாறுபடுமாதலால் இரட்சிக்கப்பட முடியாது. ஆகவே, நாம் சரியாக வேதத்தின் போதனைகளின்படி செய்ய கவனமாயிருப்போம்.

இந்தப் பிரகாரம் இரட்சிக்கப்பட்டபோதே தேவன் வாக்களித்த பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அப்போஸ்தலர் 2:38

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நாளும் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான போதனைகளின்படி மட்டுமே வாழ்ந்தால் இம்மையில் தேவசமாதானம் சந்தோஷம், ஆசீர்வாதங்கள் மறுமையில் நித்திய ஜீவன் கிடைப்பது உறுதியே.

பின்வரும் வேத வார்த்தைகளை ஆழ்ந்து நோக்கவும்

1. மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை தருவேன். வெளிப்படுத்தல் 2:10

2. ஏனெனில் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி நாம் அவ பக்தியையும், லௌகீ இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி.... தீத்து 2:11,12;

3. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் II பேதுரு 3:18.

இப்பேருண்மைகளை வாசிக்கும் அன்பரே உலகில் நிலையற்ற அநேகத்தின் பேரில் மனிதன் தன் மனதைச் செலுத்தி ஆராய்ந்தும் முடிவில் சமாதானமின்றி இருப்பதை கேட்கிறோம், பார்க்கிறோம், படிக்கிறோம். பாவத்தினின்று எப்போது இரட்சிக்கப்படுவது சிலர் எல்லாம் முடிந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என்றிருப்பார். அப்படி இருக்கலாகாது. இதோ இப்பொழுதே அணுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சண்ய நாள் II கொரிந்தியர் 6:1 தீயினும் கொடிய பாவத்தினின்று இரட்சிக்கப்பட இன்றே நல்ல தீர்மானம் செய்வீர்.

**ஜி.டேனியல், சென்னை - 10**

# தேவை! மிகவும் அவசரமாய்த் தேவை!!

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் சபைக்காக தன்னையே ஈந்த அன்பின் ஆண்டவரின் நாமத்திலே வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். சுகமாய் இருப்பீர்களாக. வேதப்பகுதி (அப். 4:34-37)

செய்தியின் தலைப்பு அநேக யூகங்களை உங்களுக்குள்ளே கொண்டு வந்திருக்கும். நாங்கள் ஏதோ பொருள்நாடி மறைமுகமாய் கேட்கப் போகிறோம் என்று நினைத்திருந்தால் தயவாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். திருமறை ஆசான் பத்திரிக்கை ஆசிரியரும் சரி, எழுத்தாளர்களாகிய நாங்களும் சரி, நைச்சியமாக பேசி உங்கள் பாக்கெட்டில் கை வைக்கும் எண்ணம் எப்போதுமே எழும்பியதில்லை. பிறகு ஏன்? இப்படி ஒரு தலைப்பு. மெய்யாகவே இந்த செய்தியிலே பிரதான தேவையை வெளிப் படுத்தியிருக்கிறோம்.

**I ஆறுதலின் மகன் பர்னபா**

பிரியமானவர்களே என்ன ஒரு அருமையான புனைப் பெயர் பாருங்கள். (அப். 2:41-47). கிறிஸ்துவின் சபையானது துவங்கப்பட்ட முதல் நாள் 3000 பேர் கிறிஸ்துவின் சபையாக சேர்க்கப்பட்டனர். நியாயப் பிரமாணத்தின் பிடியிலே அகப்பட்டு கிடந்த யூதர்கள் அதிலிருந்து விடுதலை பெற்று ஆனந்த களிப்புடன் எருசலேமை விட்டும், அப்போஸ்தலரை விட்டும் பிரிய மனமில்லாத ஒரு அன்பு பிணைப்பு! ஒரு புதிய தேவனுடைய சபையாகிய குடும்பம். தேவைகளும் அதிகமாய் இருந்த காலம் இத்தனை ஆயிரம் மக்களை போஷிக்க அநேகர் மனமுவந்து முன்வந்தனர். அப்போஸ் தலர்களுக்கு ஒருபுறம் சுவிசேஷத்தின் வல்லமையைப் பார்த்து மகிழ்ச்சி. இன்னொரு புறம் என்ன செய்யப் போகிறோம்? என்கிற பரிதவிப்பு. அப்பொழுது, எழும்பி பிரகாசித்த ஒரு தேவனுடைய மனிதன் தான். "அப்போஸ்தலர்களால் ஆறுதலின் மகன்" என்றழைக்கப்பட்ட "பர்னபா என்ற மறுபேர் கொண்ட யோசே" என்றவன். இந்த மாமனிதன் மெய்யாகவே தேவை யறிந்து அப்போஸ்தலரை ஆறுதல் படுத்தினான் (மத். 6:19-21) இந்த மனிதன் பரலோகத்தில் சேர்த்து வைத்தான்.

அப்படியென்றால் இன்றைக்கு நாம் தேவனுக்கு கொடுக்க வில்லையா? நிச்சயமாகவே கொடுக்கிறோம். யாருக்கென்றால் தொலைக் காட்சி பெட்டி வழியாக போலியாக கண்ணீர் வடிக்கிறவர்களுக்கும், கள்ளப்

போதகர்களுக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். DDயாகவும், Cheque க்காகவும் அனுப்புகிறோம். அவர்களோ என்ன செய்வதென்றே தெரியாமல் அநேக கட்டிடங்களை கட்டி அவைகளுக்கு தேவனுடைய கூடாரங்கள் என்கிற பெயரை சூட்டி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். (மத். 24:1-2). சாலமோன் கட்டிய ஆலயம் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராமல் ஒழிந்து போகும் என்று ஏன் சொன்னார். (மத்தேயு 8:20) மனுஷகுமாரன் தலை சாய்க்க இடமின்றி இருந்தது ஏன்? (1கொரி 4:11) அப்போஸ்தலர்கள், பசியோடும், தாகத்தோடும் தங்க இடமில்லாதவர்களாக ஏன் சுற்றித் திரிந்தனர். சிந்தியுங்கள். நாளை இந்த உலகம் அழியுமானால் கட்டிடங்களா பரலோகம் செல்லும் (1யோவா 4:20).

எப்போதாவது நம் அண்டை வீட்டில் தலைக்கு எண்ணை பூச வசதியற்ற பிள்ளைகளையும் நம் ஆராதனையில் கந்தல் ஆடை உடுத்தி வரும் சகோதர சகோதரிகளை பார்க்க நமக்கு நேரம் இருந்திக்கிறதா? ஊழியத்திற்கு ஒரு சைக்கிள் கூட வாங்க வசதியற்ற எத்தனை பேரை நமக்குத் தெரியும் (மத். 25:34-40) வாசியுங்கள். (நீதி 19:17) ஏழைக்கு இரங்கிக் கர்த்தருக்கு கடன் கொடுங்கள். அயல்நாட்டில் இருந்து வந்து இந்தியாவில் ஆண்டவரை அறிவித்து தங்கள் தொப்பியைக் கழற்றி அதில் ஆகாரம் வாங்கி புசித்து ஊழியம் செய்தவர்களும் இன்று ஏர்கண்டிஷன் ரூமை விட்டு வெளியே வராமல் இருப்பவர்களும் சரியா? நாம் என்று விழித்துக் கொள்ளப் போகிறோம். நீங்கள் யாருக்குக் கெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**II <u>சமாதானம் செய்து வைத்த பர்னபா :</u> (அப். 9:26-28)**

(மத் 5:9) இங்கேயும் தான் ஒரு சிறந்த தேவனுடைய மனிதன் என்பதை பர்னபா நிருபித்திருக்கிறார். பிரியமானவர்களே ஒரு காலத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அழிக்க தீவிரமாய் இருந்த பவுல் ஆண்டவரால் (அப். 9:1-16) சந்திக்கப்பட்ட பிறகு ரோம அரசாங்கம் கொலை செய்யத் தேடியது சரி! எருசலேமில் வந்து கிறிஸ்துவின் சபையாருடன் சேர்ந்து கொள்ளப் பார்த்தான். ஆனால், ஒரு காலத்தில் இந்த மனிதன் கிறிஸ்துவிற்கும் கிறிஸ்துவின் சபைக்கும் பெரிய சவாலாக விளங்கினானே! என்று சபையார் ஏற்க மறுக்கின்றனர். இப்போது பர்னபா சவுலை சபையோடே சமாதானம் செய்து வைத்தான். புதிய ஏற்பாட்டில் கொஞ்சம் குறைய 13 அருமையான நிருபங்களை இந்தப் பவுல்தான் எழுதினார்.

பிரியமானவர்களே! அந்திரேயா தன் சகோதரனான பேதுருவை இவர் மேசியா தானா? வந்து பாரும் என அழைத்து வந்தான். பின்னாளில் பேதுருவின் ஊழியம் எவ்வளவு அருமையானது பார்த்தீர்களா?

இன்று சபைகளின் நிலை என்ன? பிரியமானவர்களே! சபைக்கு வரும் ஒரு விசுவாசியை அவரது பழைய வாழ்க்கையை சுட்டிக்காட்டி, அல்லது அவரது சரீர ஊனத்தை, வியாதியை எள்ளி நகையாடி விரட்டியடிக்கப்பட்ட ஆத்துமாக்கள் எத்தனை ஆயிரம் பேர், நாம் இழந்த பேதுருக்கள் எத்தனை பேர்? நாம் இழந்த பவுல்கள் எத்தனை பேர்? இன்னும் நாம் எத்தனை பேரை இழக்கப்போகிறோம்? இழந்ததெல்லாம் போதாதா? ஏழ்மை கோலத்தில் பிறந்து - அடிமையைப் போல சிலுவையில் தொங்கிய ஆண்டவர் இன்று பகட்டுக்காரர்களின் ஆண்டவர் என்கிற ஆபத்து மெல்ல பரவி வருகிறது. ஜாக்கிரதை தேவை.

அவசரத் தேவையென்ன? நீங்கள் உடனடியாய் பர்னபாவாக மாற வேண்டும். ஆண்டவரிடம் வரும் ஒரு ஆத்துமா கூட இனி பின் வாங்க கூடாது. உங்கள் பங்கு என்ன?

## III <u>பலவீனனை தாங்கிய பர்னபா</u> (அப். 15:35-41)

ஒருமுறை பவுலின் ஊழியக்குழு தாங்கள் சுவிசேஷத்தை அறிவித்த பட்டணங்களை சுற்றிப்பார்க்கப் புறப்பட்டது ஏற்கனவே (அப். 13:13) மாற்கு யோவான் என்ற சீஷன் பாதிப்பிரயாணத்தில் திரும்பிப்போய் விடுகிறான். பவுல் அதை மனதில் கொண்டு அவனை கூட்டிக் கொண்டு போகக் கூடாது என்கிறார்.

ஆனால், இதே பவுல் தான் II தீமோ 4:11 தன் மரண தருவாயில் மாற்குவை அழைத்துக் கொண்டு வா, அவன் எனக்கு ஊழியத்தில் மிகவும் பிரயோஜனமுள்ளவன் என்கிறார். இந்த மாற்றம் எப்படி சாத்தியம் பர்னபா என்று ஆறுதலின் மகன் மாற்குவை திடப்படுத்தி, தட்டிக் கொடுத்து, தோளோடு, தோள் சேர்த்து ஆதரித்ததால் தான். ஒரு அருமையான ஆத்துமா கிடைத்தது. நீங்கள் பர்னபாவை போல மாறவேண்டும்.

ரோம 15:1-3 பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பலவீனரை தாங்கி நம் அன்பினாலே பலப்படுத்துவோம். ஆண்டவரும் அப்படியே செய்தார். (1கொரி. 1:10-13) நாம் பிரிந்து கிடக்கவா கிறிஸ்து ஜீவனை கொடுத்தார். பவுலைச் சேர்ந்தவன், கேபாவைச் சேர்ந்தவன் என்பது போல இன்று பல பிரிவுகளாக கிறிஸ்தவர்களாகிய நாம் பிரிந்து கிடக்கிறோம். நாம் தேவனுக்குத் தேவை. ஒன்றுபடுவோம். கிறிஸ்தவர் களாய் இருப்போம். கிறிஸ்துவை உலகிற்கு அறிவிப்போம். தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும் இவைகளே இன்றைய அவசரத் தேவை. சிந்தித்து செயல்படுவோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

அன்புடன்,

***S. பிச்சைமுத்து,*** தூத்துக்குடி.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டரவாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்மாதமும் இத்தொடர் கட்டுரையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மாதத்தில் அப்போஸ்தலர்களின் பெயரும் அப்போஸ்தலருக்கான தகுதியாம் சங்கங்களையும் அறிந்து கொண்டோம். அதில் அப்போஸ்தலர்களின் பெயர் பட்டியலில் "முந்தினவன் பேதுரு எனப்பட்ட சீமோன்" (மத். 10:2) என்று போடப்பட்டிருந்தாலும் முதலில் இரத்த சாட்சியாக மரணமடைந்த அப்போஸ்தலனை இம்மாதத்தில் அறிந்து கொண்டு அதன் பின்பு முந்தினவனைப் படிப்போம்.

## பாடம் - 1

### முதல் இரத்த சாட்சியான செபதேயுவின் குமாரன் யாக்கோபு (அப். 12:1-3)

இயேசுவினால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலரில் இருவர் யாக்கோபின் நாமத்தையுடையவராக இருந்தனர். அதில் ஒன்று அல்பேயுவின் குமாரன் யாக்கோபு மற்றொருவர் செபதேயுவின் குமாரன் யாக்கோபு. இவர் பெயர் பட்டியலில் முதலில் இடம் பெறாவிட்டாலும் இயேசு கிறிஸ்துவுக்காக முதலில் இரத்த சாட்சியாக மரித்து பாக்கியவனாகக் காணப்படுகிறார் (லூக்கா 6:22)

### யாக்கோபின் வாழ்க்கைக் குறிப்பு

இவரது பெற்றோர் தகப்பன் செபதேயு, தாய் சலோமி. இவருடைய சகோதரன் யோவான் இவரும் இயேசுவின் அப்போஸ்தலரில் ஒருவர். இவர்களின் தொழில் கலிலேயாக் கடலில் மீன் பிடித்து விற்பது. பல மீன் படகுகள் இவருக்கு இருந்திருக்கின்றன. இவரது மேற்பார்வையில் பல மீனவர்கள் பணியாற்றினர். பேதுரு, அந்திரேயா இவர்களின் பங்குதாரர்களும் (கூட்டாளியும்) நண்பர்களுமாயிருந்தனர். எனவே, யாக்கோபு, யோவான், பேதுரு, அந்திரேயா ஆகிய நால்வரும் சேர்ந்தே கலிலேயாக் கடலில் மீன் பிடிக்கச் செல்வார்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் இந்த நால்வரும் மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். தங்கள் தொழிலில் நேர்மையும் தேவனிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டிருந்ததால் பரிசேயர்களின் அராஜகத்தை வெறுத்து ஆண்டவருக்காக காத்திருந்தனர் யோவான் ஸ்நானகனின் பிரசங்கமான மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்

(மத். 3:1-8). என்பதை ஆழமாக சிந்தித்து, யூதேயா தேசத்தார் அனைவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானம் பெற்றபோது இவர்களும் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 1:21,22).

செபதேயுவின் குமாரன் யாக்கோபும் இயேசு கிறிஸ்துவும் நெருங்கின உறவினராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனவே இயேசுவை சிறுபிராயத்திலிருந்தே அறிந்து இருந்தார். இதன் காரணமாக 12 சீஷர்களில் முக்கிய தூணாக இருந்தார். (கலாத் 2:9) இப்படிப்பட்டக் காரணங்களால் யாக்கோபின் தாய் சலோமி தேவனுடைய ராஜ்யத்தில் தனது குமாரராகிய இரண்டு பேரில் ஒருவனுக்கு இயேசுவின் வலது பாரிசத்திலும் இன்னொருவனுக்கு இடது பாரிசத்திலும் இடம் வேண்டும் என்று ஆண்டவரிடத்தில் கேட்டாள். (மத். 20:20,21).

## யாக்கோபின் அப்போஸ்தலனாக அழைக்கப்படுதல்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையால் செபதேயுவின் மகன் யாக்கோபை அழைத்தார். அப்பொழுது தங்கள் வலையை பழுது பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசுவின் அழைப்பை உடனே ஏற்றுக் கொண்டு படகையும், தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின் சென்றார். (மத். 4:21,22) இந்த சம்பவத்தை மாற்கு எழுதும்போது யாக்கோபும் தன் சகோதரன் யோவானும் தன் தகப்பனாகிய செபதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு அவருக்குப் பின் சென்றார்கள் என்று எழுதுகிறார் (மாற்கு 1:20) அப்போஸ்தல ஊழியம், அழைப்பு என்பது தியாகத்தின் அடிப்படையிலே இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் ஊழியம் செய்கின்ற சிலர் நான் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டேன் என்றும் என்னுடைய ஊழியம் அப்போஸ்தல ஊழியம் என்றும் மார்தட்டிக் கொண்டு பேசுவார்கள். ஆனால் அப்போஸ்தலனுக்கான ஒரு தகுதியும் இருக்காது அவர்களுடைய வாழ்க்கையும் சுகபோகமாக இருக்கும். இப்படிப்பட்டவர்களே இன்று வலம்வரும் கள்ள அப்போஸ் தலர்கள் என்றும் கபடமுள்ள வேலையாட்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள் அது ஆச்சரியமல்ல சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே! என்று பவுல் கூறுகிறார் (2கொரி. 11:13,14).

வேலை இல்லாதவருக்குத்தான் ஊழியம் என்று அநேகர் தவறாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு மீன் பிடிக்கும் வேளையில் இருந்தவர்களை அழைத்து என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார் (மத். 4:18,19) அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி எல்லா வற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள் (லூக். 5:11).

நம் அப்போஸ்தலனாகிய யாக்கோபும் தனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று விட்டு தான் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாக இருந்தார். ஆதலால் ஆண்டவர் இயேசு அநேக வேளைகளில் யாக்கோபுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். உதாரணமாக இயேசு மறுரூபமாகும் போதும் இருக்கச் செய்தார் (மாற்கு 5:37-43) யாக்கோபுக்கும் அவரது சகோதரனுக்கும் இடி முழக்க மக்கள் என பெயரிட்டார் (மாற் 3:17) அப்போஸ்தலரில் முக்கிய தூண்களில் ஒருவராக யாக்கோபை ஏற்படுத்தி கனப்படுத்தியிருக்கிறார். (கலாத் 2:9).

## யாக்கோபின் ஊழியம்

இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்தெழுந்து அப்போஸ்தலருக்கு நாற்பது நாள் தன்னை உயிரோடு இருக்கிறவராகக் காண்பித்தார். பின்பு பத்து நாளுக்குபின் வந்த பெந்தெகொஸ்தே என்னும் ஐம்பதாம் நாளிலே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்று பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் சுவிசேஷத்தை வல்லமையாய் பிரசங்கித்தனர். எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் பூமியின் கடைசி எல்லை வரைக்கும் சுவிசேஷம் பரம்பி பலன் தந்தது. இந்த ஊழியத்தில் யாக்கோபு தன்னை எருசலேம் பகுதியில் அதிகமாக ஒப்புக் கொடுத்திருந்தாகத் தெரிகிறது! கி.பி. 33ல் கிறிஸ்துவின் சபை எருசலேம் ஸ்தாபிதமானது முதற்கொண்டு சுமார் 15 ஆண்டுகள் ஊழியத்தை தைரியமாக செய்திருக்கிறார்! இந்த யாக்கோபும் அவரது சகோதரன் யோவானும் தைரியசாலிகளாக இருந்ததினால் தான் இயேசு இவர்களுக்கு இடி முழக்க மக்கள் என பெயரிட்டார். பொதுவாக ஊழியத்தை செய்கிறவர் களுக்கு தைரியம் மிக அவசியமாக தேவைப்படுகிறது. அதுவும் பரிசேயர் கள், சதுசேயர்கள், வேதபாரகர்கள் போன்றோர் நடுவில் எருசலேமில் பிரசங்கிக்க அதிக தைரியம் தேவை! இப்படிப்பட்ட தைரியசாலியாக யாக்கோபு எருசலேமில் ஊழியத்தைச் செய்து அன்றைய நாளில் முக்கிய பேச்சாளராக தூணாக திகழ்ந்திருக்கிறார். யூத மதத் தலைவர் களுக்கும், ஏரோது ராஜாவுக்கும் சிம்ம சொப்பனமாக இருந்திருக்கின்றனர்.

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை, கோவை.**

### தேவனுக்கு எது பிரியம் ?

- *ஜெபம் செய்வது (1தீமோ 2:23)*
- *பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படிவது (கொ 3:20)*
- *நன்மை, தானதர்மம் செய்வது (நீதி 21:3)*
- *தேவனைக் குறித்து மேன்மை பாராட்டுவது (எரே 9:24)*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered [illegible] No. 47661/87 - New Delhi
Postal R[illegible] No. Erode / 26 / 2006 - 2008


# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

**இயக்குனர்,**

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**




| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV சனி | காலை | 7.15 - 7.30 |
| தமிழன் | TV ஞாயிறு | இரவு | 9.45 - 10.00 |
| SS மியூசிக் TV | திங்கள் | காலை | 7.00 - 7.15 |


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555